# அரையாண்டுத் தேர்வு – 2024

9 – ஆம் வகுப்பு

## சமூக அறிவியல்

காலம் : 2.30 மணி

மதிப்பெண்கள் : 100

### பகுதி – I

14 X 1 = 14

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சுமேரியர்களின் எழுத்து முறை .......................... ஆகும்.
   அ) பிக்டோகிராபி ஆ) ஹைரோகிளிபிக் இ) சோனோகிராம் ஈ) கியூனிபார்ம்
2. மனிதர்களுடன் மரபணுவியல் நோக்கில் மிகவும் நெருக்கமாக இருப்பது ..........
   அ) கொரில்லா ஆ) சிம்பன்ஸி இ) உராங் உட்டான் ஈ) பெருங்குரங்கு
3. சேரர்களைப் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு எது ?
   அ) புகளூர் ஆ) கிர்நார் இ) புலிமான் கோம்பை ஈ) மதுரை
4. .................... என்ற கிரேக்க நகர அரசு, பாரசீகர்களை இறுதிவரை எதிர்த்து நின்றது.
   அ) அக்ரோபொலிஸ் ஆ) ஸ்பார்ட்டா இ) ஏதென்ஸ் ஈ) ரோம்
5. கிருஷ்ணதேவராயர் ..................................ன் சமகாலத்தவர்.
   அ) பாபர் ஆ) ஹுமாயூன் இ) அக்பர் ஈ) ஷெர்ஷா
6. அ) புதிய தரை மற்றும் கடல்வழி கண்டுபிடிப்புகளால் பொருளாதார மையங்கள் இத்தாலிய நகர அரசுகளிலிருந்து ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகலுக்கு மாற்றப்பட்டன.
   ஆ) குதிரைகள் அமெரிக்காவை பிறப்பிடமாகக் கொண்டவை.
   இ) நவீன யுகத்தின் தொடக்க காலத்தில், பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிடவில்லை.
   ஈ) போர்ச்சுகீசியர்கள் அரேபியர்களுடன் இணைந்து இந்தியாவில் வாணிக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.
   அ) அ மட்டும் சரி ஆ) ஆ மட்டும் சரி இ) அ மற்றும் ஈ சரி ஈ) இ மட்டும் சரி
7. *கூற்று* : கிழக்கே சீனா முதல் மேற்கே ஆப்பிரிக்கா வரை நீண்டிருந்த கடல் வணிகத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்தியா இருந்தது.
   *காரணம்* : – இந்தியாவின் நிலவியல் அமைப்பு இந்தியப் பெருங்கடலின் மையத்தில் அமைந்துள்ளது.
   அ) கூற்று சரி காரணம் கூற்றை விளக்குகிறது. ஆ) கூற்று தவறு. காரணம் சரி.
   இ) கூற்றும் காரணமும் தவறானவை. ஈ) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை.
8. புவியின் திடமான தன்மை கொண்ட மேற்புற அடுக்கை .................... என்று அழைக்கிறோம்.
   அ) கருவம் ஆ) கவசம் இ) புவி மேலோடு ஈ) உட்கரு
9. அனைத்து வகை மேகங்களும் ..................................ல் காணப்படுகிறது.
   அ) கீழடுக்கு ஆ) அயன அடுக்கு இ) இடையடுக்கு ஈ) மேலடுக்கு
10. உயிர்க்கோளத்தின் மிகச் சிறிய அலகு ..........................................
    அ) சூழ்நிலை மண்டலம் ஆ) பல்லுயிர்த்தொகுதி இ) சுற்றுச்சூழல் ஈ) இவற்றில் எதுவும் இல்லை.
11. கீழ்க்கண்ட எந்த ஒரு நாடானது அதிபர் அரசாங்க முறையினைக் கொண்டுள்ளது ?
    அ) இந்தியா ஆ) பிரிட்டன் இ) கனடா ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
12. இந்திய அரசியலமைப்பின் எந்த பகுதி தேர்தல் ஆணையத்தைப் பற்றி கூறுகிறது ?
    அ) பகுதி III ஆ) பகுதி XV இ) பகுதி XX ஈ) பகுதி XXII
13. தேசிய வருமானத்தின் உண்மை மதிப்பீடாக இவை கருதப்படுகிறது. அ) மொத்த நிகர உற்பத்தி
    ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி இ) நிகர தேசிய உற்பத்தி ஈ) நிகர உள்நாட்டு உற்பத்தி
14. பின்வருவனவற்றுள் எது இரண்டாம் துறையை சார்ந்ததல்ல ?
    அ) கட்டுமானம் ஆ) உற்பத்தி இ) சிறுதொழில் ஈ) காடுகள்

### பகுதி – II

எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.
(25ம் வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேணடும்)

10 X 2 = 20

15. ஹமுராபியின் சட்டம் முக்கியமான சட்ட ஆவணமாகும் – விவரி.
16. பெருங்கற்காலத்தில் இறந்தோரைப் புதைக்கும் வழக்கத்தின் வகைகளைக் கூறு.
17. புத்த சமயத்தைப் பரப்ப அசோகர் மேற்கொண்ட முயற்சிகள் என்னென்ன ?
18. சீனப் பெருஞ்சுவர் பற்றி எழுதவும்.
19. 'கொலம்பிய பரிமாற்றம்' என்றால் என்ன ?

20. புவியின் உள் அடுக்குகள் யாவை ?
21. குருட்டு ஆறு என்றால் என்ன ?
22. வளி மண்டலம் – வரையறு.
23. கடலடி நிலத்தோற்றங்கள் யாவை ?
24. உயிர்க்கோளம் என்றால் என்ன ?
25. ஆபிரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறையைக் கூறுக.
26. போக்சா – வரையறு.
27. பொருளாதார மேம்பாட்டின் குறியீடுகள் யாவை ?
28. பணம் ஏன் கண்டுபிடிக்கப்பட்டது ?

## பகுதி – III

ஏவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். (42வது வினா கட்டாய வினா) 10 X 5 = 50

29. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1) மதகுருமார்கள் ஆட்சி | – | முதல் தீர்த்தங்கரர் |
| 2) வாக்குரிமை | – | வாடிகன் |
| 3) மரியானா அகழி | – | அரசியல் உரிமை |
| 4) ரிஷபர் | – | மதத்திற்குப் புறம்பானவர்மீது விசாரணை |
| 5) நீதி விசாரணை | – | பசிபிக் கடலின் ஆழமான பகுதி |

30. 1) கற்கள், செப்பேடுகள், நாணயங்கள், மோதிரங்கள் ஆகியவற்றின் மீது பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் .............................. ஆகும்.
2) ................ என்பது மனிதத் தலையும் சிங்க உடலும் கொண்ட கல்லால் ஆன மிகப்பெரிய உருவம் ஆகும்.
3) பிறச்சார்பு ஊட்ட உயிர்கள் என அழைக்கப்படுபவை ..............................
4) ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட சிக்கலான உணவுச் சங்கிலி அமைப்பினை ...... என அழைக்கிறோம்.
5) பெண்களுக்கான மூதாதையர் சொத்துரிமை சட்டத்தை 1989இல் நடைமுறைப்படுத்திய இந்திய மாநிலம் —
31. விவசாயம், பானை செய்தல், உலோகக் கருவிகள் செய்தல் ஆகிய துறைகளில் நிகழ்ந்த வளர்ச்சி பெருங்கற்காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான மாற்றமாகும் – உறுதிப்படுத்தவும்.
32. சிந்துவெளி நாகரீகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுதுக.
33. மறுமலர்ச்சியின் விளைவுகள் பற்றி எழுது.
34. எரிமலைகள் வெடிக்கும் காலக் கட்டத்தைப் பொறுத்து அதன் வகைகளை விவரி.
35. வளிமண்டலத்தின் அமைப்பைப் பற்றி ஒரு பத்தியில் எழுது.
36. மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை ?
37. வேறுபடுத்துக.
அ) கருவம் மற்றும் புவிஓடு.
ஆ) உற்பத்தியாளர் மற்றும் சிதைப்பவர்
இ) காரணம் கூறு. – வெப்பச்சலன மழை 4 மணி மழை என்று அழைக்கப்படுகிறது.
38. நேரடித் தேர்தலின் நிறைகள் மற்றும் குறைகளை விவரி.
39. அடிப்படைக் கடமைகள் என்றால் என்ன ? அவற்றை உன் பள்ளி வளாகத்தில் எவ்வாறு செயல்படுத்துவாய் ?
40. ஏதேனும் ஐந்து சுற்றுச்சூழல் சட்டங்களையும் அவற்றின் செயல்களையும் விவரி.
41. ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் ஒழுங்கமைக்கப்படாத துறைகளில் நிலவுகின்ற வேலை வாய்ப்பை ஒப்பிடுக.
42. இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
அ) டெல்லி ஆ) அகமதாபாத் இ) மதுரை ஈ) பனாரஸ் உ) தேவகிரி

## பகுதி – IV

2 X 8 = 16

கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

43. தமிழகத்தின் அரசியல் சக்திகள் எந்தளவுக்குச் சங்ககால ஆட்சி அமைப்பின்மீது தாக்கம் செலுத்தின ?
*(அல்லது)* சூழ்நிலை மண்டலத்தின் பல்வேறு கூறுகளை விவரி.
44. *பின்வரும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.*
1) பசிபிக் நெருப்பு வளையம் 2) ஆல்ப்ஸ் 3) செயல்படும் எரிமலை ஒன்று 4) நிலநடுக்கத்தால் பாதிப்படையும் பகுதி (ஏதேனும் ஒன்று) 5) டெல்டா பகுதி ஒன்று 6) குளிர்பாலைவனம் ஒன்று 7) வெப்ப நீரோட்டம் ஒன்று.
*(அல்லது)* 1) பிரெய்ரி 2) டௌன்ஸ் 3) தூந்திரபல்லுயிர் தொகுதி (ஏதேனும் ஒன்று 4) வெப்பமண்டலக்காடுகள் பல்லுயிர் தொகுதி (ஏதேனும்) 5) ஹோவாங்கோ ஆறு 6) இங்கிலாந்து 7) இமயமலை 8) பசிபிக் பெருங்கடல்.